1970 நவம்பர் 28]

DR. H. V. HANDE : While we are very happy to learn from the Hon. Minister that a crore and odd rupees has already been earmarked, may I know the amount spent so far and has the Government any intention to introduce a short passenger service from Madras to Cuddalore so that it will divert to some exhent the heavy road taffic, as it will be economical and will also provide a turist attraction?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இதிலே, இன்னும் எவ்வளவு செலவு செய்ய வேண்டிய பாக்கி இருக்கிறது என்ற விவரம் கைவசம் இல்லே. அப்படிச் செலவு செய்ய வேண்டியிருக்குமானுல் தமிழக அரசு சிறு துறைமுக நிதியிலிருந்து முன்பணமாகச் செலவு செய்து மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வகை இருக்கிறது.

பயணிகளே ஏற்றிச் செல்லக்கூடிய விதமாக துறைமுகத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னுர்கள். தற்போது சரக்குகளே ஏற்றிச் செல்லும் வகையில்தான் வேலே நடந்து வருகிறது. பிரயாணிகள் நாகப்பட்டினத்தில் ஏறி கிழக்கு நாடுகளுக்குச் செல்லு கிருர்கள்

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : கடலூர் துறைமுகப் பகுதி சைக்ளோன் ஏரியா, தூத்துக்குடி பாதுகாப்பான பகுதி என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். நாகப்பட்டினம் துறைமுகப் பகுதியும் புயல் வீசும் பகுதியாக இருப்பதால் அதை அபிவிருத்தி செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : சைக்ளோன் ஏரியாவாக இருக்கக்கூடிய பகுதியை ஆழ்கடல் துறைமுகமாகக் கட்ட அதிகச் செலவாகிறது. ஆகவே, நாகப்பட்டினம் துறைமுகம் கூட இடைநிலேத் துறைமுகமாகத்தான் இருக்கிறது. இப்போது கடலூர் துறைமுகத்திற்குச் செலவாகிற ஒரு கோடி 39 லட்சம் ரூபாய் செலவு பூராவும் மத்திய அரசிடமிருந்து பெற்றுச் செலவு செய்வதாகும் நாகப்பட்டினம் துறைமுகத்தையும் பெரிதாக்க செயற்குறிப்பை தூத்துக்குடி துறைமுக வேலே முடிந்த பிறகு எடுத்துக் கொண்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கலாம்.

பாசனத் திட்டங்களுக்கு நிதி

* 56 வினு.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 370 கோடி ரூபாய் செலவில் சிறு பாசனத் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு தயாரித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம் நீங்கலாக தமிழ்நாடு முழுவதும் மூன்று லட்சம் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் தோண்டி பம்ப்

செட்டுகள் அமைப்பதற்காக 368.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு 1969-ம் வருஷம் ஜூலை மாதம் மத்திய விவசாய கூட்டுறவு அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது.

பின்னர் இந்தத் திட்டத்தின் முதற்பகுதியாக விவசாய மறு நிதி வங்கி (ஏ.ஆர்.சி.)-யின் உதவி பெற்று 67,000 கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் வெட்டி பம்ப் செட் அமைக்க 59.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1969-ம் வருஷம் அக்டோபர் மாதம் திட்டம் தயாரித்து இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: 368 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு தயாரித்திருக்கும் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாகிலும் பணம் கொடுக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசிடம் நிதி கோரத் தேவையில்லை. இதற்கு வேண்டிய அவ்வளவு பணத்தையும் ரிசர்வ் வங்கியின் கிளையாக இருக்கும் மறு நிதி வங்கி கொடுத்து விடுகிறது. மத்திய அரசிடம் உதவி கோர வில்லை, கோரத் தேவையும் இல்லை.

திரு. இல. பலராமன்: இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு கிணறுகள் தோண்டுவது என்று அரசாங்கம் திட்டம் தயாரித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நீலகிரி மாவட்டம் தவிர என்று சொன்னேன். மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்தக் கிணறுகள் வெட்டுவதற்கும் பம்ப் செட்டுகள் வைப்பதற்கும் திட்டம் இருக்கிறது. எந்த மாவட்டத்திற்கு எவ்வளவு என்று சொல்ல வேண்டுமென்றால் ஒரு சில மாவட்டங்களைப் பொறுத்துத்தான் நினைவில் இருக்கிறது. இந்த மாவட்டத்திற்கு எவ்வளவு கிணறுகள் என்று குறிப்பாக, தனியாகக் கேட்டால் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. சோ. கருணாநாதன்: அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டம் நீங்கலாக என்று சொன்னார்கள். நீலகிரி மாவட்டத்திலும் காய்கறிகள் பயிரிட கிணறுகள் வெட்ட வேண்டியிருக்கிறது. அதையும் அரசு ஏற்றுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நீலகிரி மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதியில் அவ்வாறு தண்ணீர் வசதி இருக்கிறது என்ற குறிப்புகளைக் கொடுப்பார்களானால் அதையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நிபுணர்கள் சொன்னது, மலையில் கிணறுகள் வெட்டினால் நிரந்தரமாகத் தண்ணீர் இருக்காது என்பதாகும். ஆகவேதான் நீலகிரி மாவட்டம் தவிர என்ற முறையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. நஞ்சன்: நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஏராளமாக நெல் விவசாயம் செய்கிறார்கள். அங்கு ஒருபோக சாகுபடி செய்து வருகிறார்கள். அங்கு இந்தத் திட்டத்தின்கீழ் கிணறு வெட்டிக் கொடுத்தால் இருபோக சாகுபடி செய்ய முடியும்.

கூடலூர் பகுதியில் மாயூர், மசனகுடி பகுதிகளில் கிணறு வெட்டிக் கொடுத்தால் விவசாயிகளுக்கு ஆதாயமாக இருக்கும். ஆகவே, அந்தப் பகுதியில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மலைப் பகுதியில் தண்ணீர் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் அடிநீர் அதிகமாக இருக்கும் என்று கூற முடியாது. கேரளாவை எடுத்துக் கொண்டால் 120 அங். மழை பெய்கிறது. ஆனால் கிணறுகளின் மூலமாகத் தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் 120 அடி, 140 அடி, 200 அடி வரை சென்றால்தான் தண்ணீர் கிடைக்கும். நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் நீர் இருக்கும் என்று நிபுணர்கள் சொன்னால் இந்தத் திட்டத்தின்கீழ் நிச்சயமாக அந்தப் பகுதியிலும் கிணறுகள் தோண்டிக் கொடுக்க முடியும்.

ஓசூர் பகுதியில் மாட்டுப் பண்ணை

* 57 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— 10-00 a.m.

தர்மபுரி மாவட்டத்தில், ஓசூர் பகுதியில் பெரிய மாட்டுப் பண்ணை ஏற்படுத்த தமிழ்நாடு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to the proposed new Cattle Farm, in Hosur taluk there is some history behind the location of the Cattle Farm. The proposal came into being in 1968 when the late Thiru Govindaswami, Minister for Agriculture, came there. He recommended particular spot for examination. The present Director of Animal Husbandry and also the Secretary in-charge of Agriculture of the Central Government, Shri B. Sivaraman came there and recommended it. But unfortunately, that place has been left out and an alternate site has been suggested. The late Hon. Minister, Thiru Govindaswami had stated that he would do justice to the originally proposed place, may I request the present Honourable Minister to go into the whole matter and do justice?

THE HON. THIRU K. V. SUBBIAH : There is no move to open a big Livestock Farm in the Dharmapuri district by the Government of Tamil Nadu. There is already a big Livestock Farm in the Hosur taluk of the Dharmapuri district. However, the Government of India have suggested to open a Central Jersy Cattle Breeding Farm in the Hosur taluk and action is being taken to acquire the land in Pane area from the Forest Department. It is now in the preliminary stage.

In September 1970, the Government of India were informed that this Government are agreeable to place 500 acres in Pane area belonging to the Forest Department and an area of 316.66 acres of Government Poramboke land in Denkanikottah Sub-taluk of the Dharmapuri district at their disposal for the establishment of the Frissian Cattle Farm in this State. The Government of India